ந.க.எண்.அ1/4065/2023 நாள் : .12.2023

## இராமநாதபுரம் மாவட்டம்

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,

## இணையதள அறிவிக்கை (Notification)

### திருவாடானை ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் கீழ் ஊதியம் பெறும் அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர் காலிப்பணியிடத்திற்கு நேரடி நியமனம்

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை ஊராட்சி ஒன்றியம் பொது நிதியின் கீழ் ஊதியம் பெறும் தலைப்பில் காலியாக உள்ள இரவுக்காவலர் (1-பணியிடம்) காலிப்பணியிடத்திற்கு நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

### காலிப்பணியிடத்தின் விபரம்

| வ. எண் | பதவியின் பெயர் / ஊதிய விவரம் | தகுதி விபரம் | வயது வரம்பு (01.07.2023 தேதியில்) | | காலியிடம் | இனசுழற்சி விபரம் |
|---|---|---|---|---|---|---|
| | | | வகுப்பு | வயது வரம்பு | | |
| 1 | இரவுக்காவலர் ரூ.15,700-50,000 (நிலை 1) | எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும் | பொதுப்பிரிவினர் | 18 - 32 | 1 | பொதுப் போட்டி (முன்னுரிமை அற்றவர்) |
| | | | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 18 - 34 | | |
| | | | ஆதிதிராவிடர் /பழங்குடியினர் | 18 - 37 | | |

**நிபந்தனைகள்:**

1. விண்ணப்பதாரர்கள் கல்விதகுதி, இருப்பிடம், சாதிச்சான்று, முன்னுரிமைச்சான்று மற்றும் இதர சான்றுகளின் ஆதாரம் இணைத்து அனுப்ப வேண்டும்.
2. வயது மற்றும் கல்வித்தகுதியற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விணணப்பதாரர் காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய பகுதியில் வசிப்பவராக இருக்க வேண்டும். திருவாடானை ஊராட்சி ஒன்றிய பகுதியில் தகுதியான விண்ணபதாரர்கள் இல்லையெனில் இம்மாவட்டத்தைச்சேர்ந்த பிற ஒன்றிய விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.
4. தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்காணல் நடைபெறும் விவரம் தனியே அஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும்.
5. இந்த அறிவிக்கையினை (Notification) இரத்து செய்வதற்கான அனைத்து அதிகாரமும் நியமன அலுவலருக்கு உண்டு.
6. கொரோனா தொற்றால் பெற்றோர் இருவரையும் இழந்த விண்ணப்பததாரர்களுக்கு வட்டாட்சியரிடம் பெற்ற சான்றின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படும்.

**விண்ணப்பங்கள் பெறப்படும் நாள்:**

அலுவலக வேலை நாட்களில் 15.12.2023 முதல் 19.01.2024 வரை பிற்பகல் 5.45 மணிக்குள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவே அனுப்பப்பட வேண்டும்.

ஆணையாளர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)
ஊராட்சி ஒன்றியம்,
திருவாடானை.
இராமநாதபுரம் மாவட்டம் - 623407

**விண்ணப்பங்கள் இராமநாதபுரம் மாவட்ட இணையதளத்தில்** https://ramanathapuram.nic.in// **பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.**

**ஆணையாளர்**
**திருவாடானை ஊராட்சி ஒன்றியம்**
**இராமநாதபுரம் மாவட்டம்.**

**நகல்:** விளம்பர பலகை